வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி-18.7.2026 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

இந்திய விண்வெளி வரலாற்றில் முதன்முறையாக தனியார் நிறுவனம் தயாரித்த விக்ரம்-1 ராக்கெட் இன்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

உலகளாவிய சவால்களுக்கு மத்தியில் மிக வேகமாக வளர்ந்து வரும் முக்கிய பொருளாதார நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று மேற்கு வங்க மாநிலத்தில் 3 நாள் அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் வருகிற 20-ஆம் தேதி தொடங்க உள்ள நிலையில் கூட்டத் தொடரை சுமுகமாக நடத்த நாளை அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற உள்ளது.

ராக்கெட்

இந்திய விண்வெளி வரலாற்றில் முதன்முறையாக தனியார் நிறுவனம் தயாரித்த விக்ரம்-1 ராக்கெட் இன்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. ஆந்திர மாநிலம் ஸ்ரீ ஹரிகோட்டாவில் உள்ள சத்தீஷ்தவான் விண்வெளி மையத்தில் இருந்து இன்று மதியம் 12.05 மணிக்கு இந்த ராக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த சாதனைக்காக ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் என்ற தனியார் நிறுவனத்திற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடி ஸ்கைரூட் குழுவினருடன் தொலைபேசியில் உரையாடி

இந்த வரலாற்று சிறப்பு மிக்க விண்வெளி சாதனையை பாராட்டினார். மேலும் விக்ரம்-1 குழுவினரை தன்னை சந்திக்க வருமாறு அழைப்பு விடுத்தார்.

இதுதொடர்பாக பிரதமர் விடுத்துள்ள செய்தியில் ..........

(வாய்ஸ்)

இந்தியாவின் விண்வெளிப் பயணத்தில் விக்ரம்-1 திட்டம் ஒரு வரலாற்று சிறப்பு மிக்க புதிய அத்தியாயம் என்று அவர் கூறி உள்ளார். நாட்டின் இளைஞர்களின் திறமை, உறுதிப்பாடு மற்றும் தொழில் முனைவோரின் மனப்பான்மையை இத்திட்டம் பிரதிபலிப்பதாக அவர் குறிப்பிட்டார். அதேவேளையில் இந்தியாவின் விண்வெளி துறை சீர்திருத்தங்கள் எவ்வாறு புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குகின்றன என்பதை இது வெளிப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

*ராக்கெட்-வாழ்த்து -1*

இந்தியாவின் முதல் தனியார் ஏவுகணையான விக்ரம்-1 வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டதற்கு ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனத்திற்கு குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, வெளியுறவு துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், மத்திய அமைச்சர்கள் திரு கிரண் ரிஜிஜு , திரு ஜிதேந்திர சிங் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக குடியரசு துணைத் தலைவர் திரு சிபி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் இந்த மைல்கல் சாதனை இந்தியாவின் விண்வெளி பயணத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை குறிக்கின்றது என கூறி உள்ளார். மேலும் இது உலக விண்வெளி சக்தியாக இந்தியாவின் எழுச்சியை வலுப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த குறிப்பிடத் தக்க சாதனையுடன்

தொடர்புடைய அனைவருக்கும் தனது வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும் அவர் கூறி உள்ளார்.

*ராக்கெட்-வாழ்த்து*

இந்தியாவின் முதல் தனியாரால் உருவாக்கப்பட்ட விக்ரம்-1 விண்கலத்தை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியதற்காக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவத்திற்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்த கண்டுபிடிப்பு இந்தியாவின் விண்வெளித் துறையை மேலும் வலுப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*நிர்மலா சீதாராமன்*

உலகளாவிய சவால்களுக்கு மத்தியில் மிக வேகமாக வளர்ந்து வரும் முக்கிய பொருளாதார நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். மதுரையில் இன்று நடைபெற்ற தொழில் முனைவோருக்கான மாநாட்டில் உரையாற்றிய அவர் யுபிஐ தளம் ஒவ்வொரு மாதமும் 20 பில்லியனுக்கும் அதிகமான பண பரிவர்த்தனைகளை கையாண்டு வருவதாக தெரிவித்தார். இந்தியாவில் உலகளாவிய திறன் மையங்கள், பெருநகரங்களைத் தாண்டி

2-ஆம் மற்றும் 3-ஆம் கட்ட நகரங்களுக்கும் விரிவடைந்து வருவதாக அவர் தெரிவித்தார். பிரான்ஸ் நாட்டு தொழில் அதிபர்களும் இந்தியாவில் சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையுனருடன் இணைய விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார். எனவே இளைய தலைமுறை இளைஞர்கள் தங்கள் தயக்கங்களை உடைத்து முன் வர வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். பிரான்சில் நடைபெறும் அணுக்கரு ஆராய்ச்சி திட்டத்தில் இந்தியா பங்கேற்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

மோடி-அம்ரித் பாரத் ரயில்

பிரதமர் திரு நரேந்திர மோடி நேற்று மாலை அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் 20 மாநிலங்களில் புனரமைக்கப்பட்ட 75 ரயில் நிலையங்களை காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

உலகின் மிகப் பெரிய ரயில் நிலைய மறுசீரமைப்பு திட்டங்களில் ஒன்றான அம்ரித் பாரத் ரயில் நிலைய திட்டத்தின் கீழ் இந்த ரயில் நிலையங்கள் நவீன மயமாக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் சுமார் ஆயிரத்து 570 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சியில் பஞ்சாப், அரியானா மற்றும் இமாச்சல பிரதேசம் ஆகியவற்றின் ரயில் சேவையையும் பிரதமர் திரு நரேந்திர மோடி கொடி அசைத்து தொடங்கி வைத்தார். மேலும் இந்தியாவின் மிகவும் போற்றப்படும் 2 ஆன்மிக கலாச்சார மையங்களான அமிர்த சரஸ், வாரனாசி இணைப்பு ரயிலையும் பிரதமர் கொடி அசைத்து தொடக்கி வைத்தார். இன்று காலை அரியானாவின் ஜிந்த் ரயில் நிலையத்தில் இருந்து சுமார் 14 ஆயிரத்து 700 கோடி ரூபாய் செலவில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

இதுகுறித்த மேலும் சில தகவல்கள்

(வாய்ஸ்)

அம்ரித் பாரத் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் மறு சீரமைக்கப்பட்ட சென்னை பூங்கா, சின்னசேலம், குன்னூர் உள்ளிட்ட 9 ரயில் நிலையங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி காணொளி காட்சி மூலம் தொடங்கி வைத்தார். இந்த 9 ரயில் நிலையங்களையும் மக்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணித்தார். சென்னை பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் திரு ராஜேந்திர அர்லேகர் பங்கேற்றார். சுமார் 14 கோடி ரூபாய் செலவில் நடைபெற்றுள்ள இந்த நவீன மறுசீரமைப்பு பணிகளையும் அவர் பார்வையிட்டார்.

*அமித் ஷா*

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று மேற்கு வங்க மாநிலத்தில் 3 நாள் அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார். மேற்கு வங்க மாநிலத்திற்கு அருகில் உள்ள ஜூமாகாய்சில் என்ற பகுதியில் அமைந்துள்ள எல்லைப் பாதுகாப்பு படையின் 18-ஆவது பட்டாலியன் எல்லை சாவடியை இன்று பார்வையிடுகிறார். தொடர்ந்து அவர் எல்லைப் பாதுகாப்பு படையினருடன் கலந்துரையாடினார். நிகழ்ச்சியைத் தொடர்ந்து அவர் மரம் நடும் இயக்கத்திலும் பங்கேற்றார். நிகழ்ச்சியைத் தொடர்ந்து சிலிகுரியில் நடைபெறும் பொதுக் கூட்டத்திலும் அவர் பங்கேற்கிறார். மேலும் நாளை மேற்குவங்க மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு நிலவரம் குறித்து நடைபெறும் கூட்டத்திலும் பங்கேற்கிறார். கொல்கத்தாவில் உள்ள தேசிய நூலகத்தில் புதிதாக கட்டப்பட்ட அருங்காட்சியகத்தையும் அவர் திறந்து வைக்க உள்ளார்.

*கூட்டத் தொடர்*

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் வருகிற 20-ஆம் தேதி நடைபெற உள்ளது. இக்கூட்டத் தொடரை சுமுகமாக நடத்த நாளை புதுடெல்லியில் அனைத்து கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத் தொடர் வருகிற ஆகஸ்டு மாதம் 13-ஆம் தேதி வரை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இக்கூட்டத் தொடரில் சில அவசர திட்டங்களுக்கு மாற்றாக மசோதாக்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவை மீண்டும் கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*ராஜ்நாத் சிங்*

பயங்கரவாதிகளை அவர்களின் மறைவிடத்திற்குள் நுழைந்து இந்தியா தாக்கி அழிக்கும் என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற படைகளுக்கு முதலிடம் என்ற மாநாட்டில் பேசிய அவர் தீவிரவாதிகளை

இந்தியா எவ்வாறு அழிப்பது என்பதை ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம் உலகம் கண்டதாக குறிப்பிட்டார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது ஆகாஷ்தீர், ஆகாஷ் ஏவுகணை அமைப்பு மற்றும் பிரமோஸ் உள்ளிட்ட மேம்பட்ட ஏவுகணை அமைப்புகளுடன் பல அதிநவீன பாதுகாப்பு உபகரணங்களும் பயன்படுத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார். பயங்கரவாத்தை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது என்றும் அவர் தெரிவித்தார். பயங்கரவாத்திற்கு எதிராக இந்தியா உறுதியான நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார். கடந்த 12 ஆண்டுகளில் பிரதமர் திரு நரேந்திர மோடி அரசு பாதுகாப்புத் துறைக்கு புத்துயிர் அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

*ரயில்*

மத்திய ரயில்வே துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் மற்றும் உத்தராகாண்ட் மாநில முதலமைச்சர் திரு புஷ்கர்சிங் தாமி ஆகியோர் இணைந்து இன்று புதுடெல்லியில் இருந்து காணொளி காட்சி மூலம் ராம்நகர்-டேராடூன் விரைவு ரயிலை காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தனர். இந்த ரயில் உத்தரகாண்ட் மற்றும் உத்தரபிரதேசத்திற்கு இடையேயான ஒரு மேம்பட்ட ரயில் இணைப்பில் புதிய சகாப்தமாக கருதப்படுகிறது. இந்த ரயில் ஜிம்கார்பெட் தேசிய பூங்காவிற்கு செல்லும் பல சுற்றுலா பயணிகளையும் வனவிலங்கு ஆர்வலர்களுக்கும் பெரும் உதவியாக இருக்கும் என கருதப்படுகிறது.

*ஜிதேந்திர சிங்*

மத்திய பணியாளர், பொது குறைகள் மற்றும் ஓய்வூதியங்கள் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இன்று புதுடெல்லியில் ஓய்வூதிய வழக்குகள் குறித்த 2-ஆவது தேசிய பயிலரங்கில் உரையாற்றினார். நிகழ்ச்சியில் பேசிய அவர் ஓய்வூதிய தாரர்களின் கவலைகள் மற்றும் விருப்பங்களை நிவர்த்தி செய்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறினார். ஓய்வூதியம் தொடர்பான வழக்குகள் தீர்க்கப்பட வேண்டும் என்றும் இதன் மூலம் ஓய்வூதியதாரர்கள்

நீதிமன்றங்களை அணுகமாட்டாகர்கள் என்றும் அவர் தெரிவித்தார். ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நலத்துறை குடிமக்களை மையமாகக் கொண்ட பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். ஓய்வூதிய சேவைகளை இணைய வழி அமைப்புகள் மூலம் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*வெளியுறவு துறை*

இந்தியா-ஜப்பான் இடையே அதிவேக ரயில்களை இயக்க பேச்சு வார்த்தை நடைபெற்று வருவதாக மத்திய வெளியுறவு துறை தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக செய்தியாளரிடம் பேசிய வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் அதிவேக ரயில் திட்டத்திற்காக ஜப்பான் இந்தியாவிற்கு ரயில்களை வழங்க உள்ளதாக அவர் தெரிவித்தார். ஆனால் இந்த ரயில்கள் வரும் 2030-ஆம் ஆண்டில் தான் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார். அதிவேக ரயில் திட்டத்தின் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

*கிரிக்கெட்*

உலக புகழ்பெற்ற கிரிக்கெட் ஆல் ரவுண்டர் சர் கார்பீல்ட் சோபர்ஸின் மறைவுக்கு குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இரங்கல் தெரிவித்துள்ளார். அவரது குடும்பத்தினர் ரசிகர்கள் மற்றும் கிரிக்கெட் உலகிற்கும் அவர் தமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தமது சமூக ஊடக பதிவில் கிரிக்கெட் உலகம் தனது மிக ஒளிமயமான நட்சத்திரங்களில் ஒருவரை இழந்து விட்டது என தெரிவித்துள்ளார். அவர் ஒரு புகழ்பெற்ற ஆல் ரவுண்டர் என்றும் அவரது சிறப்பான பாரம்பரியம் தலைமைகளைக் கடந்து நிற்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

*ராஜ்நாத்சிங்-மருத்துவ சங்க விருது* (10)

ஆரோக்கியமான சமூகமே ஒரு வலிமையான தேசத்தின் அடையாளம் என்று பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற இந்திய மருத்துவ சங்கத்தின் விருது வழங்கும் விழாவில் பங்கேற்று பேசிய அவர் மருத்துவ வல்லுனர்கள் சுகாதார சேவைகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல் நாட்டின் வளர்ச்சி பயணத்தையும் வலுப்படுத்துகிறார்கள் எனக் குறிப்பிட்டார். மருத்துவர்கள் தங்களின் அர்ப்பணிப்பு மற்றும் சேவையின் மூலம் தேசத்தை கட்டமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். மருத்துவர்களை மதிப்பது தேசத்தின் சேவையையும், உணர்வையும் மதிப்பதாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்திய விண்வெளி வரலாற்றில் முதன்முறையாக தனியார் நிறுவனம் தயாரித்த விக்ரம்-1 ராக்கெட் இன்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

உலகளாவிய சவால்களுக்கு மத்தியில் மிக வேகமாக வளர்ந்து வரும் முக்கிய பொருளாதார நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று மேற்கு வங்க மாநிலத்தில் 3 நாள் அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் வருகிற 20-ஆம் தேதி தொடங்க உள்ள நிலையில் கூட்டத் தொடரை சுமுகமாக நடத்த நாளை அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

------------------------------